## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 350/2019 | Date : 16.03.2023 | PW1 |
| --- | --- | --- |
| Name: ஈஸ்வரன் | S/o. முத்தாக்கவுண்டர் | |
| Evidence Recorded Time: 12.26 P.M. to 01.03 P.M | | |

**6-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

வழக்கு விவரத்தில் கண்டுள்ள சொத்துக்கள் என்னுடைய சகோதரன் தேவராஜன் (எ) தேவராசுக்கு சொந்தமானது என்றால் அதில் எனக்கும் கூட்டு உள்ளது. வழக்கு சொத்துக்களும், எனக்கு பிரிந்த சொத்துக்களும் 1982-ம் ஆண்டு பாகப்பிரிவினை செய்து கொள்ளப்பட்டுள்ளது என்றால் பாகப்பிரிவினை செய்து கொண்டது உண்மைதான், ஆனால் இந்த வழக்கு சொத்தில் தடம், தென்னை மரங்கள், கொழுஞ்சி மரங்கள், 16 அடி வண்டி பாதை, கிணற்றிற்கு செல்லும் உத்தி, வாரி வாய்க்கால் ஆகியவை பிரிக்கப்படவில்லை. மேற்படி சொன்னவற்றை தவிர மற்ற சொத்துக்கள் 1982-ம் பாகப்பிரிவினை படி தேவாராஜனுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். ஆலமரத்துபட்டி கிராமம் சர்வே எண்.1245/5-ல் 3 ஏக்கர் 16 செண்ட் நிலத்திற்கு தேராஜனுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் பட்டா வழங்கப்பட்டுள்ளது. பாகப்பிரிவினை படி அவருக்கு 2 ஏக்கர் 82 செண்ட் நிலம் தான் ஒதுக்கப்பட்டுள்ளது. நான் இந்த வழக்கை அவருக்கு 3 ஏக்கர் 16 செண்ட் உள்ளது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் 2 ஏக்கர் 82 செண்ட் நிலம்தான் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது என்றும் அதில் எனக்குரிய சொத்தும் கூட்டாக ஒதுக்கப்பட்டுள்ளது என்று என்னுடைய வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய சொத்து சர்வே எண்.1245/5 நிலத்தை ஒட்டி இல்லை என்றால் சரிதான். இடையில் என் மகனுக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றாலும் சரிதான். எனக்கு 4 ஏக்கர் 75 செண்ட் நிலம் பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்டது. ஆனால் தற்போது 4 ஏக்கர் 10 செண்ட் நிலம் தான் என் வசம் உள்ளது. மேற்படி விவரத்தை என்னுடைய வழக்கிலும், நிரூபண பிரமாண பத்திரத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே எனது சகோதரர் மீது மேட்டூர் உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.323/2004

வழக்கில் என் வசம் 4 ஏக்கர் 75 செண்ட் நிலம் உள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.323/2004 வழக்கை நான்தான் என் சகோதரர் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கை மேட்டூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் தள்ளுபடி செய்ததால் மேல்முறையீட்டை இந்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண்.5/2011 ஐ தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த மேல்முறையீட்டிலும் சொத்து விவரத்தில் 4 ஏக்கர் 75 செண்ட் நிலத்தை தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்குரையில் எனக்கு 4 ஏக்கர் 10 செண்ட் நிலம் தான் உள்ளது என்று நீதிமன்ற ஆணையர் மூலம் அளவீடு செய்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்த சொத்திற்கு கிழபுறம் 16 அடி வண்டி தடம் உள்ளது என்றால் அது வேறு நபர்களுக்கு செல்லும் வண்டி பாதை ஆகும். அந்த வண்டி பாதை யார் நிலத்திற்கு செல்லும் வண்டி பாதை என்றால் தோப்பூர் ராமசாமி, கொமரசாமிகவுண்டர், சிதம்பரம் (எ) கோவிந்தசாமி ஆகியோர் நிலங்களுக்கு செல்லும் வண்டி பாதை ஆகும். மேற்படி விவரங்களை என்னுடைய வழக்கிலோ, நிரூபண பிரமான பத்திரத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். தற்போது என் நிலத்திற்கு செல்லும் வண்டி பாதையானது என் சித்தாப்பாவிடம் இருந்து வாங்கிய நிலத்திற்கு செல்லும் பாதையாகும். அந்த பாதைக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை. அதன் சர்வே எண் நினைவில்லை. என் சித்தப்பாவிடம் வாங்கிய சொத்து தேவராஜனுக்கு சொந்தமான நிலத்திற்கு மேற்கு உள்ளது. நான் தாக்கல் செய்த மேல்முறையீட்டு வழக்கு 2012–ம் வருடமே எனக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான். நான் சொல்வது போல தேவராஜன் நிலத்தில் தடம் இருக்கிற காரணத்தினால்தான் நான் மேல்முறையீட்டு மனுவின் உத்தரவு படி நிறைவேற்று மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் கணேசன் எப்போது நிலத்தினை விலைக்கு வாங்கினார் என்றால் 2019–ம் ஆண்டு விலைக்கு வாங்கினார். 2019–ல் விலைக்கு வாங்கிய காலத்தில் இருந்து அவருடைய சுவாதீனத்தில் இருந்து வருகிறது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. கணேசன் இருக்கும் வரை பொதுப்பாதையைத்தான் பயன்படுத்தி வந்தார் என்றால் வழக்கு நடந்ததால் அந்த பாதையை அழித்துவிட்டதால் பயன்படுத்தவில்லை. கணேசன் நிலத்திற்கும் என் மகன் நிலத்திற்கும் இடையில் கம்பி வேலி அமைத்துள்ளார் என்றால் சரிதான். கணேசன்

நிலத்தை செந்தில்குமார் விலைக்கு வாங்கி அவர்தான் அனுபவித்து வருகிறார் என்றால் தெரியாது. செந்தில்குமார் நிலத்தை வாங்கி அதில் போர்வெல் அமைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 4–ம் பிரதிவாதி அவருடைய சுவாதீனத்தின் அடிப்படையில் தான் கணேசன் பெயரில் பட்டா மாறியுள்ளது என்றால் மாறியிருக்கலாம். கணேசன் பெயரில் சொத்தின் சுவாதீனம் எடுக்ககூடாது என்று பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். செந்தில்குமார் மீது என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சொத்து எங்களுக்கு கூட்டாக உள்ளது என்று கேட்டுள்ளேன். சொத்துக்கள் விவசாய பூமி என்றால் சரிதான். விவசாய பூமிகளை பொறுத்து எனக்கும் தேவராஜனுக்கும் பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளதால் எனக்கு வாங்கும் முன் உரிமை பரிகாரம் கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல. செந்தில்குமார் நாங்கள் சொத்தை பயன்படுத்துவதை தடுக்கவில்லை என்றால் நாங்கள் உள்ளே போகவும் இல்லை அவர் தடுக்கவும் இல்லை. என் சகோதரர் மீது 06.10.2022–ம் தேதியில் சேலம் மாவட்ட பதிவாளரிடம் ஒரு மனு கொடுத்திருந்தேன் என்றால் சரிதான். நான் கொடுத்த மனு முழு விசாரணைக்கு பிறகு 31.01.2023–ம் தேதி மாவட்ட பதிவாளரால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். 1982–ம் ஆண்டு ஒதுக்கப்பட்ட கிணறு, பம்புசெட் ஆகியவற்றில் தேவராஜனோ, கணேசனோ, செந்தில் குமாரோ எந்த ஒரு மறுப்பும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். கணேசனுக்கு தேவராஜன் விற்பனை செய்த பத்திரத்திலோ, கணேசன் செந்தில்குமாருக்கு விற்பனை செய்த பத்திரத்திலோ எனக்கு உள்ள உரிமையை உட்படுத்திதான் பதிவு செய்துள்ளார்கள் என்றால் அவ்வாறு தான் பதிவு செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்து என்னுடைய நிலத்தை ஒட்டியுள்ள நிலம் என்று கூறியுள்ளது தவறானது என்றால் சரியல்ல. 4–ம் பிரதிவாதி சுவாதீனம் எடுத்து அனுபவித்து வந்து அந்த சொத்தில் தற்போது 6–ம் பிரதிவாதி செந்தில்குமார் சுவாதீனம் எடுத்து அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றால் சரிதான். சார்பதிவாளருக்கு எதிராக என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் பத்திரத்தை ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுள்ளேன். 5–ம் பிரதிவாதி முறைப்படி அனைத்து ஆவணங்களையும் முறையாக பரிசீலனை செய்து பதிவு செய்துள்ளார் என்றால் 5–ம் பிரதிவாதி அவ்வாறுதான் சொன்னார். நீதிமன்றம் மூலம் வழக்கு தாக்கல் செய்து ரத்து செய்து கொள்ள சொன்னார். மேற்படி விவரங்களை

என்னுடைய வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். 2019–ம் ஆண்டு என் சகோதரர் சொத்தை விற்பனை செய்து முயற்சி செய்து வருவதால் எனக்குதான் சொத்தை வாங்கும் முன் உரிமை தரவேண்டும் என்று சட்ட அறிவிப்பு கொடுத்தேனா என்றால் அறிவிப்பு கொடுக்கவில்லை, வாய்மொழியாக கேட்டேன். எனக்கும் அவருக்கும் பாகப்பிரிவினையில் இருந்தே பேச்சுவார்த்தை இல்லை. வாங்கும் முன் உரிமை எனக்கு இல்லாத காரணத்தினால்தான் நான் சட்டஅறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களை பொறுத்து எனக்கு வாங்கும் முன் உரிமை எழுவில்லை என்றாலும் இந்த வழக்கு அதிகபட்ச செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை.</u>**

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டுர்.